RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1829

OPEN ACCESS

# உளவியல் நோக்கில் பூமணியின் ‘வெக்கை’ புதினம்

**மு. நிர்மலாதேவி** [அ, *]

[அ] தமிழ் உயராய்வுத்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி-628503, தமிழ்நாடு, இந்தியா.

# Poomani's 'Vekkai' from a Psychological Perspective

**M. Nirmaladevi** [a, *]

[a] Department of Tamil, Government Arts & Science College, Kovilpatti-628503, Tamil Nadu, India

* Corresponding Author: gsminiyan@gmail.com

Received: 13-07-2022
Revised: 03-10-2022
Accepted: 18-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

The most notable writer Poomani was born in Aandipatti village near Kovilpatti. If you rank the famous novelists of Tamil literature, Poomani has an important place in it. His novels are something different, it is not about the land rather it is the voice of the poor people. The most famous among his novels is ‘Vekkai’. This novel was released in 1982 and in 2019 director Vethimaran made it into a movie titled 'Asuran'. Chidambaram plays an important role in the novel 'Vekkai'. A fifteen-year-old boy Chidambaram murders Vadakkuran. Seven days after the murder, he surrenders himself to the court. This article explores the psychological reasons behind killing a person. Psychological theories, child psychology, reasons for child crime, child Chidambaram's emotional character, approaches to psychological reasons and the reasons why murder is not seen as a crime have been psychologically explored in this article.

**Keywords:** Psychological Perspective, Poomani, Vekkai, Emotional Character

## முன்னுரை

கரிசல் வட்டார எழுத்தாளர்களில் மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தைத் தக்கவைத்தவர், கோவில்பட்டி அருகே ஆண்டிபட்டிக் கிராமத்தில் பிறந்த ‘பூமணி’ அவர்கள் (Sulochana, 2021). தமிழ் நாவல்களுக்குச் சொந்தமுகம் கொடுத்தவர்களை வரிசைப்படுத்தினால், அதில் பூமணிக்கு முக்கிய இடம் உண்டு. மொழிவளம் நிறைந்த இவரது புனைவுகளில், மண் மீதான ரசனையும் பிரியமும் அமுங்கி அடித்தட்டு மக்களின் குரல் ஓங்கி ஒலிப்பதைக் கேட்கலாம். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த புதினம் ‘வெக்கை’. இப்புதினம் 1982இல் வெளிவந்தது, 2019 இல் இயக்குநர் வெற்றிமாறன் ‘அசுரன்’ என்ற பெயரில் திரைப்படமாக எடுத்து வெற்றிக்கண்டார். பரமசிவம் ஒரு சிறு விவசாயி. அவரது 2ஆவது மகன் சிதம்பரம் தன்னுடைய அண்ணனைக் கொலை செய்த வடக்கூரானைக் கொலை செய்கிறான். பதினைந்து வயது சிறுவன் கொலைசெய்யக் காரணம் என்ன என்பதையும் அவனது தலைமறைவு வாழ்க்கையையும் விவரிப்பதாக இப்புதினக் கதை அமைந்துள்ளது.

## உளவியல் கோட்பாடு

உளவியல் என்ற சொல் கிரேக்க மொழிச்சொல் Psyche உயிரைக் குறிக்கும், logus அறிவியல் பற்றிக் குறிக்கும் ஆன்மா, மனம் போன்றவற்றை ஆராயும் இயலாகக் கருதப்படுகிறது. உளவியல் என்பது நடத்தையியல் என்றும் கூறுவர். உள்ளத்தின் (அ) மனத்தின் இயல்பினையும் அதன்

செயல்பாடுகளையும் வைத்து நடத்தைப் பண்புகளை ஆராய்வதால் மனோ தத்துவம் என்றும் கூறுவர். உள்ளுணர்வு, ஆற்றல், கவனம், மனவுணர்வு, உணர்ச்சி வேகம், இயல்பு விளக்கம், மூளைச் செயல்பாடுகள், ஆளுமை, நடத்தை மாற்றம் உள்ளார்ந்த தொடர்புகளைக் கொண்டதாகக் கூறுகின்றது. உளவியல் ஞானிகள் உளவியலில் புலன் உணர்வு அறிவாற்றல், கவனம், மனஎழுச்சி செயல் நோக்கம் ஆளுமை நடத்தை தனிப்பட்ட உறவுகள் இவற்றிற்கு இடையில் உள்ளதுதான் உளவியல் என்று கூறுவர். உளவியல் நமது அன்றாட வாழ்வில் உள்ள குடும்பம் கல்வி, தொழில் மற்றும் மனநலப் பிரச்சினைகளகுரிய சிகிச்சைகளாகவும் ஆராயப்படுகின்றன.

## குழந்தை உளவியல்

குழந்தை உளவியல் என்பது உளவியலின் பயன்பாட்டுக்கிளை ஆகும். இது குழந்தைகளின் இயல்பான மற்றும் அசாதாரண வளர்ச்சியை ஆய்வு செய்கின்றது. நாம் ஒவ்வொருவரும் தனித்துவம் பெற்றவர்கள். அந்த தனித்துவம் குழந்தைகளிடமும் காணப்படுகிறது. குழந்தை உளவியலில் ஆரம்பகாலப் படிப்பு 'நார்மல்' முழுமையாகப் புரிந்துகொள்வதும் எவற்றிற்கெல்லாம் கவனம் தரவேண்டும் என்பதையும் தெளிவுப்படுத்திக் கொள்ள குழந்தை உளவியல் உதவுகின்றது. குழந்தை உளவியலில் பிறந்த குழந்தையிலிருந்து குழந்தைப்பருவம், மலரும் பருவம், பருவமான விடலைப் பருவம் வரை அடங்குகின்றது.

குழந்தைகள் பெரும்பாலும் பெரியவர்களின் சிறிய பாதிப்புகளாகவே கருதப்படுகின்றனர். 'பிராய்டின்' மனோ உளவியல் கோட்பாட்டின்படி குழந்தை வளர்ச்சியானது உடலின் பல்வேறு இன்பமான பகுதியில் கவனம் செலுத்துகின்ற தொடர் வரிசைகளில் நிகழ்கிறது. ஒவ்வொரு வளர்ச்சியிலும் குழந்தைகள் முக்கியப்பங்கு வகிப்பதோடு மோதல்களையும் எதிர்கொள்கின்றனர்.

'வெக்கை' புதினத்தில் சிதம்பரத்தின் மனநிலையோடு இக்கோட்பாட்டை நாம் பொருத்திப் பார்க்கலாம். வளரும்போது குழந்தைகள் சுற்றுப்புறச் சூழலை உற்றுநோக்குகிறது. அதற்கேற்ற நிலையில் தன் உளப்பாங்கை அமைத்துக் கொள்கிறது. பிறந்த குழந்தை இயல்பு நிலையில் உயிரியாக மட்டுமே வளர்கிறது. இரண்டாம் நிலையில் அக்குழந்தை மனித சமூகத்திற்கு ஏற்றாற்போல் பழக்கப்படுகிறது. சிதம்பரத்தின் மனமானது தன் குடும்ப உறுப்பினர்களாகிய தாயிடமும் தந்தையிடமும் மோதுகிறது. பின் அண்ணனிடம் செல்கிறது. மறுபுறம் வடக்கூரானை நினைத்துப் பார்க்கின்றான். தாய், தந்தை, அண்ணன் இவர்களிடத்து மன உணர்வுகள் மோதுவதென்பது அன்பின்பாற்பட்டதாகவும், வடக்கூரானை மனம் என்னுகையில் அது பகையின் மோதலாகவும் அமைகிறது. இந்த மோதல் உணர்வுகளே கதையை நகர்த்திச் செல்கின்றன.

## குழந்தைகள் குற்றம் புரியக் காரணங்கள்

ஒரு குழந்தைப் பிறப்பு முதல் வளர்ந்து பெரிய மனிதனாக வளரும் வரை அவர்களின் வளர்ச்சிக்குப் பெற்றோர் காரணமாக இருக்கின்றனர். ஒரு ஆண் குழந்தையோ பெண் குழந்தையோ அது பிறக்கும் சூழ்நிலை, குடும்பம், அன்பு இவற்றின் மூலம் அதன் வாழ்க்கைச் சூழல் பின்னப்படுகின்றது. சமூகம் என்பது குழந்தைகளின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. காரணம் அவன் செய்த நற்குணங்களையும் கெட்டச் செயல்களையும் வெளிக்காட்டும் போது அவன் நல்லவனாகவும், கெட்டவனாகவும் சித்தரிக்கப்படுகிறான். வளரும் (குமரப்) பருவத்தில் ஆண் குழந்தை தன்னை ஒரு முன்மாதிரியான (Hero) மனிதனாக இந்தச் சமுதாயம் பார்க்கவேண்டும். அவன் செய்கின்ற எல்லாச் செயல்களும் இந்த சமூகத்தினை மாற்றுவதாக அவன் நினைத்துக் கொள்கிறான். ஒரு ஆண் குழந்தை தன்னுடைய குடும்பத்தின்மீது அதுவும் தாயின் மீது அதிக அக்கறைக் கொண்டவனாக இருக்கிறான்.

அவள் காட்டும் வழி சரியான இலக்கினை நோக்கிச் செல்லும்போது அவன் சாதனை மனிதன் ஆகின்றான். 'விவேகானந்தர், காந்தி' போன்றோரை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். வீட்டில் சரியான சூழ்நிலை, அன்பு, அரவணைப்பு, விட்டுக்கொடுத்தல் இல்லாத போது அவன் சமூகத்தில் இருந்து விலக்கி வைக்கப்படுகின்றான். குழந்தைகள் எல்லாச் செயல்களிலும் தன்னை ஈடுபடுத்திக்

கொண்டு வெற்றியாளராக விளங்குகின்றன. அப்படி நினைத்து வெற்றி கிட்டாவிட்டால் இந்த சமூகத்தின் மீது குறையிருப்பதாகக் காட்டுகின்றன. ஒருவன் தன் குடும்பத்தில் உள்ளவர்களையோ அல்லது தான் அதிக அன்பு செலுத்துகின்ற விருப்பமான ஒரு பொருளின் மீதோ யாராவது குற்றம் காணும்போது அதைத் தீர்க்க நினைத்து தவறு செய்கிறான்.

## சிதம்பரத்தின் செயல்பாடுகள்

'வெக்கைப்' புதினத்தில் முக்கியப் பாத்திரமாக விளங்குபவன் சிதம்பரம். பதினைந்து வயதுடைய சிறுவன் தன் அண்ணனைக் கொன்றை வடக்கூரானை வெட்டிக்கொன்று விடுகின்றான். கொலை செய்த அன்றிலிருந்து ஒரு வாரம் காட்டில் தலைமறைவாக வாழும் சூழல் அமைகிறது. அவன் ஒருவாரம் கழித்து எட்டாவது நாள் நீதிமன்றத்தில் சரணடைய வருவது வரையிலான சம்பவங்கள் புதினமாகப் புனையப்பட்டுள்ளன (Poomani, 2012).

"சிதம்பரத்துக்குப் பல பல நினைவுகள் இருந்தும் தைரியமாக அடிவாரத் தெருக்கோடியை நோக்கி நடந்தான் பிடுங்கி ஓடியபோது கசாப்புக் கடை ஆட்டுக்குரல் போல் அலறியடங்கியதைக் கேட்டான். ஓடிவந்து அரிவாளைப் புழுதி மண்ணில் துடைத்து கையில் தேய்த்தான். இடுப்பில் தொங்கிய உறையில் அரிவாளை மாட்டினான் வடக்கூரான் கதை முடிந்துவிட்டது" என்று நினைத்துக் கொண்டு யாரும்பார்த்துவிடக் கூடாது என்று தப்பி ஓடிவிட்டான் (Poomani, 2012).

சிதம்பரத்திற்கு அவனுடைய அண்ணன் உற்றத் துணையாக இருக்கிறான். அவனுடைய இழப்பு என்பது தாங்கிக்கொள்ள முடியாத வருத்தமாக இருக்கிறது. பண்டிகைகள் வருகின்ற போது அம்மா, அய்யா, அண்ணன், தங்கை, அத்தை, மாமா இவர்களோடு சந்தோசமாக வாழ்கிறார்கள். அண்ணன் இல்லாத இந்நேரத்தில் இப்படி பண்டிகை வரும்போது குடும்பம் நிலைகுலைகின்றது.

அண்ணனை நினைத்து அய்யாவின் மனம் படும் வேதனையை ஆத்தாப் பார்க்கும் போது சிதம்பரத்தின் மனதில் வடக்கூரான் தான் காரணம் அதற்கு நாம் எதாவது செய்யவேண்டும் என்று திட்டம் தீட்டுகின்றான். அவனுடைய நினைவுகளில் அண்ணனுடன் இருந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றான்.

"வெள்ளாமை நேரங்களில் அய்யாவோடு காட்டில் படுத்திருக்கணும், அதுவேதனிச் சுகம், நிறைய கதைகள் சொல்லுவார். நினைத்து நினைத்து பார்த்து நேற்று நடந்தது போல சொல்லுவார். தோட்டத்தில் வெள்ளைச்சோளம் போட்டிருந்தோம் சக்கைப் போடு போட்டிருந்தது சோளம். அய்யாவுடன் அண்ணனும் நானும் மாரி மூலையில் காவல் இருந்தோம்" (Poomani, 2012).

அய்யாவின் அன்பே தனிதான் ஒரு சமயம் நீச்சுப் பழகுவதற்கு சுரைக் குடுக்கை கேட்டான் சிதம்பரம் ஆத்தாவிடம், நீ வா நான் உனக்கு தாறேன் என்று அவனை தூக்கி கிணற்றுக்குள் போட்டுவிட்டார். அவன் பயந்து கைகால்களை உதையும் போது அருகில் வந்து உள்ளங்கைளில் ஏந்தி நீந்தக் கற்றுக் கொடுத்தார். "கையில் தூக்கி வைத்து அழுக்குப்போக தேய்த்து குளிப்பாட்டுவார்" (Poomani, 2012).

இவ்வளவு அன்பாக இருந்த அய்யாவிற்கு அண்ணன் இழப்பு தாங்க முடியாமல் சிதம்பரத்தைக் கொலை செய்யத் தூண்டுகிறது மனம். ஆத்தாவிடம் கஞ்சி காய்ச்சித் தரச்சொல்லி தொந்தரவு செய்தான். எதுக்கு சும்மா தான்,

"அப்ப விசயத்தச் சொல்லு."

"ரெண்டு சுத்திப் பார்க்கலாம்னு."

"அப்ப உம்பிரியம் எச்சரிக்கையாகச் செய்யணும்."

"ஆமா இதெல்லாம் ஒனக்கு எதுக்கு கைக்காவலுக்குத் தான்."

"சரிதாண்டா. அண்ணனக்கு எம்புள்ள கையில ஒண்ணுமில்லாம இருக்கப் போய்த்தான் இம்புட்டு ஆச்சு. கையில ஆயுதமிருந்தா ஆரு போயிருப்பாஅவங்கிட்ட" (Poomani, 2012).

ஆயுதமில்லாமல் வெற்று ஆளாக மகன் இருந்ததால்தான் வடக்கூரான் மகனைக் கொன்றுவிட்டான் என்று தாய் புலம்புகிறாள். எந்நேரமும் ஒருவர் ஆயுதம் தாங்கித் திரிவது என்பது முடியாத காரியம். நடந்துவிட்ட நிகழ்விற்கு எப்போதுமே நாம் இப்படி இருந்தா இது நடந்துள்ளது என்று மாற்றுச் சிந்தனையுடன் பேசுவது இயல்பு. ஆனால் எதார்த்தம் என்பது வேறு. சிதம்பரத்திற்கு ஆத்தாவின் புலம்பல் அய்யாவின் வருத்தம் இப்படிப்பட்ட குடும்பச் சூழலில் வளர்ந்த அண்ணனை கொலை செய்ய எப்படி அவனுக்கு தைரியம் வந்தது என்று யோசித்து பல நாட்களாகத் திட்டம் தீட்டி வடக்கூரானைக் கொன்றுவிட்டான்.

## உளவியல் காரணங்கள்

“பதினைந்து வயதுகூட ஆகல அவ்வளவு துணிச்சலோடு தனியா எப்படி கொலை செய்ய மனம் வரும் என்ற எண்ண ஓட்டங்கள் ஓடுகின்றது” (Poomani, 2012). வடக்கூரான் என்பவன் நல்லவன் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

பதினைந்து வயது சிறுவன் கொலை செய்கிறான் என்றால் அதை இந்தச் சமூகம் எப்படிப் பார்க்கும், சிறுவன் கொலை செய்வானா? என்பது எல்லோரிடமும் எழும் பெரிய கேள்வியா உள்ளது. இருப்பினும் சிறுவன் சிதம்பரம் கொலை செய்கிறான். காரணம் குடும்பத்தின்மீது கொண்ட அன்பு, வளர்ந்த சூழல் அண்ணன்மீது தாய், தந்தை வைத்திருந்த பாசம் குடும்பத்தின் மீது இவனுக்கிருந்த பற்று இவையெல்லாம் சிதம்பரம் கொலை செய்வதற்குரிய காரணிகளாக அமைகின்றன.

எங்களுக்கு என்று இருந்தது ஒரு தோட்டம் அதையும் அபகரிக்க எத்தனையோ முறை அய்யாவிடம் கேட்டுள்ளான். அய்யா விட்டுக் கொடுப்பாரா? இல்லை ஆத்தா தான் அதற்கு சம்மதிப்பாளா? தண்ணீர் பாய்ச்சுவது முதல், ஒழவு அடிப்பதுவரை வடக்கூரான் பிரச்சினைப் பண்ணிக் கொண்டே இருந்தான். அவனுக்கு ஆசை அதிகம்தான். சரியாக வாங்கிக் கட்டிக் கொண்டான். எத்தனை பேர் வாயிலே விழுந்திருப்பான், தெருப் புழுதியைக் கவ்விட்டான் (ப.76) என்று சிதம்பரம் தான் கொலை செய்ததற்கு காரணம் கூறிக்கொண்டான்.

“இந்த விசாகத்தோடு அஞ்சு வருசம் ஆச்சு எம்புள்ள செத்து” விளக்கு ஏற்றி முன்னால் உட்கார்ந்து அழுதிருக்கிறாள் அழும்போது ரோசனையுள்ள மந்திரி என்று சொல்லுவாள் (Poomani, 2012).

அண்ணன் செத்து ஐந்து வருசமாச்சு என்று சொல்வதிலிருந்து ஐந்தாண்டுகள் கழித்தே சிதம்பரம் வடக்கூரானைக் கொலை செய்கிறான் என்பது தெரியவருகிறது. இந்தக் காலக் கணக்கீடே நிகழ்ச்சிகளுக்கு இணைப்பையும் உண்மைத் தன்மையையும் உருவாக்குகிறது. காலம் நேர்க்கோட்டில் பயனிப்பதே நிகழ்ச்சிப் பின்னலுக்கு முழுமைத் தன்மை உருவாக்குகிறது.

ஐந்து ஆண்டுகளாக வடக்கூரானைக் கொல்லத் திட்டம் போட்டிருக்கிறான். சிதம்பரத்தின் ஆழ்மனதில் எப்போதுமே ஓடிக்கொண்டே இருந்திருக்கிறது. எப்படிப்பட்ட அண்ணன் “வலது கையே போய்விட்டதே” என அய்யா புலம்பும்போது அவன் மனது எப்படி மாறாமல் இருக்கும். ஒவ்வொரு நிமிடமும் அவனை எப்படிக் கொலை செய்வது அதற்கு ஏற்ற சூழல் அமையக் காத்துக் கிடந்ததை இக்கொலைச் செய்தி உறுதி செய்கிறது.

“குடும்ப பாசம் அவனை கொலை செய்யத் தூண்டுகிறது. அய்யாவையும், அண்ணனையும் பார்த்தா அண்ணன் தம்பி போல இருக்கீக கொஞ்ச நாள் போச்சுன்னா ஆரு மகன் ஆரு தகப்பன்னு தெரியாது” என்று சிதம்பரத்தின் தாய் மூவரையும் கண்குளிர கண்டு ரசித்தாள். அண்ணன் எப்போர்ப்பட்டவன் என்று அய்யாவும் ஆத்தாவும் அடிக்கடி அவனிடம் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

அண்ணன் செத்தக் காரணம் தெரியாமல் வீட்டில் உள்ளவர்கள் நிம்மதி இழக்கின்றனர். புலிக்குட்டியை அடித்துப் பொட்டங் கெட்டிட்டானோ? எந்தப் பயலோ என தந்தை கதறி அழுவதைப் பார்த்தால் எந்த மகனுக்கும் மனம் பதறத்தான் செய்யும். அண்ணனை இழந்து வாடும் குடும்பத்திற்கு என்ன செய்யமுடியும் என்பதை நினைத்துப் பார்க்கிறான்.

“வடக்கூரானைக் கொன்றால் அண்ணன் திரும்பி வரமாட்டான் பிறகெதுக்கு அவனைக் கொல்லணும் அதுவும் இவ்வளவு நாள் காத்துக்கிடந்து” என்ற நேர்மறையான எண்ணம் தோன்றுகிறது (Poomani, 2012)..

வடக்கூரானுக்கு நிலத்தை விற்கவில்லை என்றால் என்ன? அவனுக்கு இருக்கும் நிலத்தில் இது எம்மாத்திரம், அதுக்காக உயிரைக் கொன்றுவிட்டால் காடு வந்துவிடுமா என்ன? அய்யா தான் கொடுத்து விடுவாரா? அய்யாவுடன் நேருக்கு நேர் மோதி இருக்கணும். வீணாக பகையை மனசுக்குள்ளேயே வளர்த்திரக்கானே இவனைக் கொல்வது சரிதான் என்ற மனநிலைக்கு வருகிறான்.

அண்ணனைக் கொன்றால் என்ன? இன்னொருவனைக் கொன்றால் என்ன? இப்படிப்பட்ட நினைப்பு இருக்கிறவனை ஒழித்துக் கட்டுவதில் தவறில்லை என்று அவனது மனம் சொல்கிறது. ஒரு பக்கம் கொலை செய்ய, எண்ணினாலும் உடனடியாக அவனின் பகுத்தறிவு மனம் வேண்டாம் என சிந்திக்கிறது. இருப்பினும் அவனுடைய ஆழ்மன வெளிப்பாடே இச்செயல் நிறைவுறக் காரணமாகிறது.

## சிதம்பரத்தின் செயல் குற்றமாக பார்க்கப்படாமைக்கான காரணங்கள்

வடக்கூரானை ஏன் கொலை செய்தாய் என்று குடும்பத்தினர் சிதம்பரத்திடம் காரணம் கேட்கவில்லை. அதை விடுவித்து அவனுக்கு ஆதரவாகத்தான் இருந்தார்கள். கொலை செய்யப்பட்ட வடக்கூரான் ரொம்ப நல்லவன் கிடையாது. ஊர் மக்களை அடிமைத்தனமாகவும், ஆடு, மாடுகளை சொந்தம் கொண்டாடுவதும் தான் அவன் வேலை. அதனால் தான் யாரும் சிதம்பரத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தையோ, இனத்தையோ அடிமைப்படுத்த வேண்டும் என்றால் அவர்களின் நிலங்களைக் கைப்பற்றுவார்கள் என்பர். அதனால் வடக்கூரானுக்கு நிலத்தின்மீது ஆசையால் சிதம்பரத்தின் அண்ணனைக் கொன்று புதருக்குள் வைத்தான். மண் மீது ஆசை கொண்டவன் மண்ணிலே அழிக்கப்பட்டான்.

கொலைச் செயல்புரிந்த பிறகு ஏழு நாளும் சிதம்பரம் யார் கண்ணிலும் படாமல் தலைமறைவு வாழ்க்கை வாழ்கிறான். அய்யா, அம்மா, மாமா, அத்தை அவனைக் காப்பாற்றுகின்றனர். “என் பிள்ளையை கொலை செய்தவனை நானே கொன்று ஜெயிலுக்குப் போறேன் யாரும் எனக்குத் துணையாக வரவேண்டாம்” என்று தாய் புலம்புகின்றாள்.

சிதம்பரத்தின் மாமா அவனை கட்டி அணைக்கும் போது அவனுடைய இடுப்பில் உள்ள அரிவாளைக் கண்டுப்பிடித்து விடுகிறார்.

“எதிரியை செலவக்குட்டி தீட்டியாச்சு இனி எவனுக்கு தைரியமிருக்கு” என்று சிதம்பரத்தின் மாமா கூறுகிறார்.

“செத்துட்டாணா”

“எல்லாம் எங்களுக்குத் தெரியும்”

“அய்யாவுக்குத் தெரியுமாடா?”

“அவர் பெத்தப் புள்ளதான் நீ” அவன் தலையை மாமா வருடினார்.

வசமான இடத்துல தான் அமஞ்சிருக்கான் என்று சிதம்பரத்தின் மாமா அவனது செயலுக்குக் குற்றம் சொல்லாமல் பாராட்டுகிறார்.

“முழுத்தப் பிள்ளையைப் பறிகொடுத்த சோகம் தாங்காமல் தான் சாராயம் குடிக்கிறார்” என்று சிதம்பரத்தின் தந்தையைப் பார்த்த ஊரார் சொல்கின்றனர். அவருடைய தைரியம் யாருக்கு வரும் எப்போர்பட்டவர் தோட்ட வேலை பார்த்தார் என்றால் அண்ணனும் பின்னாடியே வேலை செய்யப் பழகுவான். சிதம்பரம் அய்யா, அண்ணன் மூவரும் சேர்ந்து இருந்தால் வீடே மகிழ்ச்சியாக இருக்கும். அவர்கள் மூவரின் செயல்கள், பேச்சு இவற்றை எல்லாம் கண்கொட்டால் பார்த்துக் கொண்டு இருப்பாள்.

சிதம்பரத்தின் அத்தையும், அம்மாவும், அத்தைக்கு ஜானகியை அண்ணனுக்கு கட்டவேண்டும் என்று எல்லோரும் முடிவு செய்து இருந்தனர். ஜானகி நோயில் இறந்துவிட்டாள். அண்ணனும் வடக்கூரானால் இறந்து விடுகிறான். இருவரின் இறப்பையும் சிதம்பரம் பொருத்திப் பார்க்கிறான். நிச்சயிக்கப்பட்ட இருவரும் இறந்துவிட்ட கையறுநிலை உணர்வாக சிதம்பரத்தின் மன வெளிப்பாடு அமைகிறது.

## முடிவுரை

ஐந்து ஆண்டுகள் கழித்து சிதம்பரம் கொலைச் செயல் புரிய மேற்சொன்னவையெல்லாம் காரணங்களாக அமைகின்றன. தாய், தந்தையின் புத்திர சோகம் அவனைப் படாத பாடுபடுத்துகிறது. நிம்மதி இழந்து தவிக்கும் பெற்றோருக்குத் தன்னால் ஆன ஆறுதல் அழிக்க அவன் மனம் எண்ணுகிறது. இதை யாரிடமும் சொல்லாமல் ஐந்து ஆண்டுகள் காத்திருந்து செய்து முடிக்கிறான். காயம் நாட்பட நாட்பட ஆறும் என்பது உலகியல் நிகழ்வு. ஆனால் சிதம்பரத்திற்கு புத்திர சோகத்தால் பெற்றோர் துன்புறுவது இன்னொன்று வடக்கூரான் நல்லவனில்லை என்பது இந்த இரண்டு காரணங்களும்தான் அவனை இச்செயலுக்குத் தூண்டியிருப்பதை கதை நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

## References

Poomani, (2012) Vekkai, Kalachuvadu Publications, Nagercoil, India

Sulochana, V. (2021) Ethnography of Arunthathiyar in Poomani Novels (Piragu), International Research Journal of Tamil, 3(S-1), 273-278. https://doi.org/10.34256/irjt21s144

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License